2010 ஏப்ரல் 27]

### (ஆ) இலங்கை அகதிகளை, மலேசிய அரசு கைது செய்து வாட்டுவதைத் தடுக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே இருந்து அகதிகளாகச் சென்ற 75 குடும்பங்களை, அதில் 15 பச்சைக் குழந்தைகளும் அடங்குவர். அவர்களை கடந்த 3 நாட்களாக மலேசியா அரசாங்கம் கைது செய்து, அந்த நாட்டிற்குள்ளும் எடுத்துக்கொள்ளாமல், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திலும் ஒப்படைக்காமல், அவர்கள் பசியும் பட்டினியுமாக வாடிக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து இந்த அவையின்மூலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, நம்முடைய மத்திய அரசின்மூலமாகத் தலையிட்டு, உடனடியாக அந்த 75 உயிர்களைக் காப்பாற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற இந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை இந்த அவையின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

### (இ) சோளிங்கர், அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரோப் கார் இயக்குவதும் விரைவில் தொடங்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் அத்திருக்கோயில் பாலாலயம் செய்யப்பட்டு, மூலவர் தரிசனத்திற்குப் பக்தர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. வெளியிலே உள்ள உற்சவரை மட்டுமே தரிசனம் செய்கின்றார்கள். ஆந்திரா, கர்நாடகா, வட இந்தியா இன்னும் பல்வேறு இடங்களிலிருந்து வருகின்ற பக்தர்கள் மூலவரைத் தரிசிக்க முடியாமல் தவிக்கின்றார்கள். எனவே, ஆலயத் திருப்பணி எப்போது நிறைவுபெறும்? அதேபோல் சோளிங்கர்,